Skumar

# 1501/LAO/PTAM01 NOVEMBER 2016

## இக்கால இலக்கியம்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

1. (அ) உமர்கய்யாம் பாடல்களில் இடம்பெற்றுள்ள கவிமணியின் கவிச்சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) "சூரியகாந்தி" கவிதையில் இடம் பெற்றுள்ள சமூக விழுமியங்களை எடுத்துரைக்க.

2. (அ) "சபாபதி" தொடக்க கால வாழ்க்கையும் போராட்டத்தையும் எழுதுக.

(அல்லது)

(ஆ) "பிறகொரு இந்திரஜித்" நாடகத்தின் மையக் கருத்தை எடுத்து எழுதுக.

3. (அ) "கமலாம்பாள்" - பாத்திரப்படைப்பை எழுதுக.

(அல்லது)

(ஆ) குறிஞ்சிமலர் புதினத்தில் இடம்பெற்றுள்ள சமுதாய மாற்றங்களை எழுதுக.

4. (அ) "கேதாரியார்தயார்" சிறுகதையின் கதைச் சுருக்கத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) "சாபவிமோசனம்" கதையை திறனாய்வு செய்க.

5. (அ) முருகனின் பெருமைகளை திரு.வி.க வழி நின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) "நற்றமிழ்" கட்டுரையில் தனிச் சிறப்பினை எழுதுக.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

6. (அ) பாரதியார் கண்ணனின் பெருமைகளாகக் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) "ஊசிகள்" கவிதையில் இடம் பெற்றுள்ள சமுதாயச் சிந்தனைகளை விவரிக்க.

7. (அ) "ரூபாவதி" நாடகத்தில் இடம் பெற்றுள்ள சமூக விடுதலையுணர்வுகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) "யாருக்கும் வெட்கம் இல்லை" நாடகத்தில் சோ குறிப்பிடும் சமுதாய அவலத்தைத் தெளிவுப்படுத்துக.



8. (அ) "வேங்கையின் மைந்தன்" புதினத்தில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) "ஒரு மனிதன் ஒரு வீடு, ஒரு உலகம்" புதினத்தில் ஜெயகாந்தன் குறிப்பிடும் வாழ்க்கைக்குரிய விழுமியங்களாகக் குறிப்பிடுவன யாவை?

9. (அ) கல்கியின் கதையில் என்னலும் நகையும் எந்த அளவுக்கு இடம் பெற்றுள்ளன என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) "காஞ்சனை" சிறுகதையின் அமைப்பினை விவரிக்க.

10. (அ) "பரமார்ந்தகுரு கதை" சிறுகதையின் மொழிநடையை திறனாய்வு செய்க.

(அல்லது)

(ஆ) "தமிழ் விருந்து" கட்டுரைத் திறனாய்வு செய்க.

———————

**1502/LBO/PTAM02** **NOVEMBER 2016**

## இடைக்கால இலக்கியம்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

1. (அ) திருஞானசம்பந்தரின் பக்திச் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருவெம்பாவையில் உள்ள பக்திச் சிறப்பினை எடுத்துரைக்க.

2. (அ) காரைக்காலம்மையாரின் சிவத் தொண்டினை எழுதுக.

(அல்லது)

(ஆ) குலசேகரர் திருமாலிடம் வேண்டுவன யாவை?

3. (அ) 'அன்புடைமை' பதிகத்தில் திருமூலர் எடுத்துரைக்கும் கருத்துக்கள் எவை?

(அல்லது)

(ஆ) 'கலம்பகம்' - விளக்கம் தருக.

4. (அ) பிள்ளைத்தமிழின் பருவங்கள் எத்தனை? அவற்றிற்கு விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) 'அபிராமி அந்தாதி' யில் அபிராமி பிறப்பினை எடுத்து விதத்தை எழுதுக.

5. (அ) தூது பொருட்கள் எவை? எடுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'களம் பாடியது' - உள்ள கருத்துக்களை எடுத்துரைக்க.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

6. (அ) நாவுக்கரசர் இறைவனிடம் கொண்டுள்ள பக்தியை முதல் இரண்டுப் பதிகங்களைக் கொண்டு எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'திருவிசைப்பா' வில் இடம் பெற்றுள்ள பக்தி மார்க்கத்தை நிறுவுக.

7. (அ) சுந்தரரின் பதிகத்தில் உள்ள தோழமை நெறியை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மார்கழி மாதத்தில் கண்ணன் மீது பாடப்படும் திருப்பாவை பாடல்களின் கருத்துக்களை விவரிக்க.



8. (அ) சிவவாக்கியல் எடுத்துரைக்கும் ஆன்மீக நெறியை தெளிவுப்படுத்துக.

(அல்லது)

(ஆ) குமரகுருபரர் எடுத்துரைக்கும் மதுரை நகரத்தின் சிறப்பினை கலம்பகம் வழி நின்று ஆராய்க.

9. (அ) 'அழகர் கிள்ளை விடுதூது' - கிளியின் சிறப்பினை தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில் கூறப்படும் முருகப் பெருமான் குறித்த புராண வரலாற்றைத் தொகுத்துரைக்க.

10. (அ) தூது இலக்கியம் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கலிங்க நாட்டில் நடைபெற்ற போர் களக்காட்சியும் வீரர்களின் நிலையையும் எடுத்துரைக்க.

———————

**1503/LCO/PTAM03** **NOVEMBER 2016**

இலக்கணம் – எழுத்து

Time : Three hours Maximum : 100 marks

பகுதி-அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

1. (அ) தொல்காப்பியம் சுட்டும் மாத்திரை, வடிவம், அளபெடை குறித்துத் தெளிவிக்க.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் பொதுப் பிறப்பு, உயிர் எழுத்துக்களின் பிறப்பினைத் தெளிவுபடுத்துக.

2. (அ) சாரியைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) அளவு, நிறைப் பெயர்ப் புணர்ச்சிகளை விளக்குக.

3. (அ) பதவியல் கருத்துக்களை நன்னூல் வழி ஆய்க.

(அல்லது)

(ஆ) குற்றியலுகரம், எழுத்துச் சாரியை பற்றி எழுதுக.

4. (அ) ஒலியன்களைக் கண்டறியும் விதிகள் யாவை?

(அல்லது)

(ஆ) உருபொலியன் இயல் என்றால் என்ன? விளக்கம் தருக.

5. (அ) தொல்காப்பிய, நன்னூல் குறிப்பிடும் முதல், சார்பு எழுத்துக்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) எண்ணிப் பெயர்ப் புணர்ச்சியை விளக்குக.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

விரிவான விடை தருக.

6. (அ) மொழி முதல், இறுதி எழுத்துக்களைத் தொகுக்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய – நன்னூல் இயல் பாகுபாடுகளை ஆய்க.

7. (அ) மெய்யெழுத்துக்களின் பிறப்பினை வரையகைக்க.

(அல்லது)

(ஆ) பிறப்பியலும் ஒலியியலும் என்பது குறித்து விவரிக்க.



8. (அ) ஒலி இலக்கணம் பற்றிய மொழியியலார் கோட்பாடுகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஆகார, ஈகார ஈற்றுப் புணர்ச்சியினை விளக்குக.

9. (அ) ரகர, புகர ஈற்றுப் புணர்ச்சிகளை ஆய்க.

(அல்லது)

(ஆ) புணர்ச்சியின் பொது இலக்கணம், ஒற்றுமை வேற்றுமைகளைத் தொல்காப்பிய – நன்னூல் வழி ஆராய்க.

10. (அ) தொகை மரபு, உருபியல் – பெயர்ப் பொருத்தத்தை ஆய்க.

(அல்லது)

(ஆ) மொழியியல் வகைகளைத் தெளிவிக்க.

———————

**1504/LDO/PTAM04** **NOVEMBER 2016**

இலக்கணம் – யாப்பு, அணியியல்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. (அ) அசையின் இலக்கணமும், வகையும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சீர் என்பது யாது? அதன் வகைகள் யாவை?

2. (அ) அடியின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) தளையின் வகைகளைச் சுட்டி விளக்குக.

3. (அ) 'மெய்ப்பாடு' என்பதற்கு உரையாசிரியர்கள் எவ்வெவ்வாறு பொருள் உணர்த்தியுள்ளனர்?

(அல்லது)

(ஆ) 'நாலிரண்டாகும் பாலுமாருண்டே' – தெளிவுபடுத்துக.

4. (அ) 'ஒன்பதும் குழவியொடிளமைப் பெயரே' — விவரிக்க.

(அல்லது)

(ஆ) உவகை பிறக்கும் சூழல்களைச் சுட்டி விளக்குக.

5. (அ) யாப்பின் வகைகளாகத் தொல்காப்பியர் சுட்டியதனை எடுத்துக்காட்டுக.

(அல்லது)

(ஆ) தொடை இலக்கணத்தினைத் தெளிவுபடுத்துக.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு மூன்றுபக்க அளவில் விடை தருக.

6. (அ) செய்யுள் உறுப்புக்களாகத் தொல்காப்பியர் மொழிந்தன யாவை?

(அல்லது)

(ஆ) அடிவகைகளைத் தொல்காப்பியர் வழிநின்று விளக்குக

7. (அ) ஆசிரியப்பாவின் வகைகளைச் சுட்டித் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) வாழ்த்தியல் வகைகளைத் தொல்காப்பியர் வழி நின்று விளக்குக.



8. (அ) எண்வகை மெய்ப்பாடுகள் யாவை? அவை எவ்வெச் சூழலில் பிறக்கும்?

(அல்லது)

(ஆ) கற்பிற்குரிய மெய்ப்பாடுகள் யாவை? தெளிவுபடுத்துக.

9. (அ) உவமப் பாகுபாட்டினை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) உள்ளுறை உவமம் என்பது யாது? விளக்குக.

10. (அ) தொல்காப்பியர் சுட்டிய ஆண்பாற் பெயர்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உலகத்து உயிர்களை எவ்வாறு பகுத்துப் பாகுபடுத்தினர்? விளக்குக.

**1505/LEO/PTAM05** **NOVEMBER 2016**

தமிழில் பிற துறைகள்

Time : Three hours  Maximum : 100 marks

பகுதி அ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

1. (அ) தமிழகப் பழங்குடி மக்களின் நம்பிக்கைகளைத் தெளிவிக்க.

(அல்லது)

(ஆ) மேல்மலை மக்களின் வாழ்வியலைப் புலப்படுத்துக.

2. (அ) மொழியியல் விளையாட்டுக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழியியலுடன் தொடர்புடைய பிற இயல்கள் யாவை?

3. (அ) செய்தி ஆசிரியரின் பணிகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) இதழ்கள் ஆற்றும் பணிகளைப் பட்டியலிடுக.

4. (அ) தமிழும் தாவரமும் என்பது குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஏட்டில் எழுதாக் கவிதைகளை விளக்குக.

5. (அ) நாட்டுப்புறக் கோட்பாட்டு ஆய்வுகளை வரையறுக்க.

(அல்லது)

(ஆ) ஆய்வியல் வழிகாட்டி பற்றி ஆய்க.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

மூன்று பக்க அளவில் விரிவான விடை தருக.

6. (அ) நாட்டுப்புற மருத்துவத்தினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சித்த மருத்துவத்தின் தனித்தன்மைகளை மதிப்பிடுக.

7. (அ) கள ஆய்வு அனுபவங்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) அழகுக் கலைகளைத் தொகுக்க.

8. (அ) கோயிற் கலையின் சிறப்புக்களை ஆராய்க.

(அல்லது)

(ஆ) இலக்கியமும் கல்வெட்டுக்களும் குறித்து விளக்குக.



9. (அ) கல்வெட்டியலின் வழி அறிவனவற்றை வரையறுக்க.

(அல்லது)

(ஆ) சங்க நூல்களில் மீன்கள் பற்றி விவரிக்க.

10. (அ) சுற்றுச் சூழல் விழிப்புணர்வினை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாசில்லாச் சுற்றுச்சூழல் குறித்து எடுத்துரைக்க.

———————

**1506/LJ1/PTAM06** **NOVEMBER 2016**

ஒப்பிலக்கியம்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. (அ) ஒப்பிலக்கியத்தின் வரையறை விளக்கங்களைத் தருக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியத்தின் நோக்கங்கள் யாவை?

2. (அ) ஒப்பிலக்கியத் துறையில் அமெரிக்காவின் பங்களிப்புப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தனிநாயக அடிகளது ஒப்பிலக்கியப் பணிகளைக் குறிப்பிடுக.

3. (அ) வான்மீகி இராமாயணம் இந்திய மொழிகளில் செலுத்திய செல்வாக்குப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தொன்மம் என்பதற்கு அறிஞர்கள் தரும் வரைவிலக்கணங்கள் யாவை?

4. (அ) தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியத்திற்கு மொழிபெயர்ப்பின் பங்களிப்பினை எடுத்துரைக்க.

5. (அ) இலக்கியம் - அறிவியல் வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) படிமம் என்றால் என்ன? விளக்குக.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

அனைத்திற்கும் கட்டுரை வடிவில் விடை தருக.

6. (அ) ஒப்பிலக்கியத்தின் அடிப்படைப் பண்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியத்தினால் விளையும் பயன்களை மதிப்பிடுக.

7. (அ) உலக அளவில் ஒப்பிலக்கியத்தில் தோற்றம் வளர்ச்சி பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழில் ஒப்பிலக்கிய வரலாற்றினை எடுத்துரைக்க.



8. (அ) பிரெஞ்சு, அமெரிக்கக் கொள்கைகளின் இலை.. யும் சிறப்பும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இலக்கிய இயக்கங்களின் பங்களிப்பினை விவரிக்க.

9. (அ) மொழிபெயர்ப்புச் சிக்கல்களை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழில் மொழிபெயர்ப்புக் கலையின் தோற்றம் வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.

10. (அ) சமுதாய நிகழ்வுகள் - இலக்கியங்கள் இவற்றுக்கிடையிலான தொடர்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இலக்கியமும் உளவியலும் எனும் பொருளில் கட்டுரைக்க.

**1507/LNO/PTAM07** **NOVEMBER 2016**

காப்பிய இலக்கியம்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. (அ) சிலப்பதிகாரம் குறிப்பிடும் அந்திமாலை நிகழ்வுகளை குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) அடைக்கலக் கதையின் கருத்துக்களை எழுதுக.

2. (அ) வஞ்சிக் காண்டத்தில் ஆய்ச்சியர் குரவை இடம் பெற்றுள்ள கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) மணிமேகலைக் காப்பியம் சிலப்பதிகாரத்தின் தொடர்பில் வந்தது என்பதை விளக்குக.

3. (அ) சீவகனின் யாழ் பயிற்சியை பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுந்தர காண்டத்தில் அரக்கியர் சீதையின் நிலையை எடுத்துரைக்க.

4. (அ) அனுமன் இலங்கையில் சீதை கண்டறிந்த விதத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) சாங்கியர் வாச வதத்தையின் செயல்களை எடுத்துரைக்க.

5. (அ) பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ள எச்சத்தின் செயல்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) சீறாப்புராணத்தின் நாட்டுப்படலச் செய்திகளை எடுத்தெழுதுக.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

6. (அ) சிலம்பு சித்தரிக்கும் புகார் நகரத்தின் அமைப்பையும் அழகையும் விவரிக்க.

(அல்லது)

(ஆ) வழக்கு உரை காதையின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

7. (அ) சிலப்பதிகாரத்தில் கால் கோள் காதையின் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பளிக்கறை புக்க காதையின் கருத்துக்களை விவரிக்க.



8. (அ) சீவக சிந்தாமணி காட்டும் காந்தருவதத்தை பெண்மைக் கோர் விளக்காக விளங்கினாள் என்பதை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சுந்தர காண்டத்தில் இடம்பெற்ற அனுமனின் செயல்களைத் தொகுத்தெழுதுக.

9. (அ) சீதைக்கும் அனுமனுக்கும் நடந்த உரையாடல் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) பயாவதியின் செயல்பாடுகளையும், பண்பு நலன்களையும் எடுத்துரைக்க.

10. (அ) பெரியபுராணம் பெருங்காப்பியமா? நிறுவுக.

(அல்லது)

(ஆ) வளன் சனித்த படலத்தின் சருத்துக்களை தொகுத்து எழுதுக.

———————

**1508/LPO/PTAM08** **NOVEMBER 2016**

பண்டைய இலக்கியம்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

1. (அ) வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகனுக்குச் சொல்லிய விதத்தை அகப்பாடல் கொண்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) கயமனார் பாடல் கருத்தை எடுத்து எழுதுக.

2. (அ) நரிவெரூ உத்தலையாரின் புறப்பாடலின் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) முல்லிக்கலிப் பாடல் கூறும் “ஏறு தழுவுதலை” பற்றி எடுத்துரைக்க.

3. (அ) “காந்தளின் கண்ணி சூடிய சென்னியன்” பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) சோழ நாட்டின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

4. (அ) நொடித்தலை விழத்தண்டினாரின் பாடல் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) "மக்கட்பேறு" அதிகாரத்தின் கருத்துக்களை எழுதுக.

5. (அ) பழமொழியில் இடம்பெற்றுள்ள மூவேந்தரின் குறிப்புக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஐந்திணை ஐம்பதில் இடம்பெற்றுள்ள குறிஞ்சித்திணை பாடல்களின் கருத்துக்களை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 12 = 60$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

6. (அ) "தாய்க்கு உரைத்த பத்து" - ஐங்குறுநூற்றுப் பாடல்களின் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருப்பரங்குன்றத்தின் "அமைப்பும் சிறப்பும்" பற்றிக் கட்டுரை வரைக.

7. (அ) நெட்டிமையாரின் பாடல்களில் இடம்பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) "காதலருடன் ஆய்ச்சியார் குரவை" ஆடிய விதத்தை எடுத்துரைக்க.



8. (அ) திரு. ஆவினன் குடியின் சிறப்புக்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பட்டினப்பாலையில் இடம்பெற்றுள்ள மக்களின் விளையாட்டுக்களைத் தொகுத்துரைக்க.

9. (அ) கோவூர் கிழார் பாடலின் இடம்பெற்றுள்ள கொடைகளை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) "புறாங்கூறாமை" "நடுவுநிலைமை" பற்றி வள்ளுவர் கூறுவனவற்றை விவரிக்க.

10. (அ) பழமொழி எடுத்துரைக்கும் கல்வி, கேள்வி பற்றிய கருத்துக்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஐந்திணை ஐம்பதில் அமைந்துள்ள பாலைத்திணை பாடல்களின் கருத்துக்களை விவரிக்க.

———————

**1509/LQO/PTAM09** **NOVEMBER 2016**

இலக்கணம் – சொல்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

1. (அ) திணை, பால், ஈறுகளைத் தெளிவிக்க.

(அல்லது)

(ஆ) மூன்றாம் வேற்றுமையை விளக்குக.

2. (அ) விரவுப் பெயர்களைத் தொகுக்க.

(அல்லது)

(ஆ) விளி ஏற்கும் உயிரீறுகளைப் புலப்படுத்துக.

3. (அ) அஃறிணை வினைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பொருள்கோள் வகைகளைத் தொல்காப்பிய நோக்கில் ஆய்க.

4. (அ) உருபன் பற்றிய மொழியியலார் கோட்பாடுகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) உருபன்களின் வகைகளை வரையறுக்க.

5. (அ) எச்சவியல், பொதுவியல் தரும் கருத்துக்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) இடைச்சொற்களை நன்னூலார் வழியில் பட்டியலிடுக.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

விரிவான விடை தருக.

6. (அ) கிளவியாக்கம் வழி 'வழு' – குறித்த செய்திகளை வரையறுக்க.

(அல்லது)

(ஆ) உருபு, பொருள் மயக்கங்களை, 'வேற்றுமை மயங்கியல்' வழி ஆய்க.

7. (அ) உரிச்சொற்களைத் தொகுக்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய – நன்னூல் இயல்களை ஒப்பிட்டு விளக்குக.



8. (அ) மொழியியலார் குறிப்பிடும் சொல்லிலக்கணக் கோட்பாடுகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய – நன்னூல் வழி தொடர் இலக்கணச் சிந்தனைகளை ஆராய்க.

9. (அ) தொல்காப்பிய – நன்னூல் உரைக்கும் சொல் இலக்கணங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) அண்மை நிலையுறுப்புக்கள் பற்றி விளக்குக.

10. (அ) உருபன்களைக் கண்டறியும் விதிகளைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) வினையெச்ச வாய்பாடுகள், பெயரெச்சம், குறிப்பு வினைமுற்று – ஆகியனவற்றைத் தெளிவிக்க.

**1510/LRO/PTAM10** **NOVEMBER 2016**

## இலக்கணம் – பொருள்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

1. (அ) 'எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே' – இந்நூற்பாவினை விளக்கி எவையேனும் இரண்டு சான்றுகள் தருக.

(அல்லது)

(ஆ) முல்லைத் திணை கருப்பொருள்கள் யாவை?

2. (அ) கரந்தைக்கே உரிய துறைகளாகச் சொல்லப்படுவன யாவை?

(அல்லது)

(ஆ) புறத்திணை பன்னிரண்டு எனில் பொருந்தாமைக்குரிய சான்றுகளை உரையாசிரியர் வழி நின்று விளக்குக.

3. (அ) மெய்யுறு புணர்ச்சி நிகழ்தற்கு முன்னரே நடைபெறும் சில நிலைகள் குறித்து ஆசிரியர் யாது கூறுவர்? விளக்குக.

(அல்லது)

(ஆ) களவியலில் சொல்லப்படும் வழிபாடு மறுத்தல், கைப்பட்டுக் கலங்கள் விளக்குக.

4. (அ) கற்பில் தலைவனுக்குரிய மரபுகளாகச் சொல்லப்படுவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) வாயில்கட்குரிய மரபுகளை விளக்குக.

5. (அ) தொல்காப்பியர் கூறும் 'அறக்கழிவுடையன' பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) பொருளியலில் சொல்லப்படும் உள்ளுறை எத்தனை வகைப்படும் எவையேனும் இரண்டினைச் சான்றுடன் விளக்குக.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

கட்டுரை வடிவில் விடை தருக.

6. (அ) தொல்காப்பியர் கூறும் பிரிவு வகைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) கைக்கிளை, பெருந்திணை பற்றி எழுதுக.



7. (அ) தொல்காப்பியர் கூறும் வஞ்சித் திணையும் துறைகளும் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் புறத்திணையியலின் துணைக் கொண்டு பண்டைத் தமிழர் போர்நெறிகளை ஆராய்க.

8. (அ) களவு வாழ்க்கையில் தோழியின் பங்களிப்பை ஆராய்க.

(அல்லது)

(ஆ) களவியலில் இடம் பெறும் செவிலி தாயின் கூற்றுக்களை விவரிக்க.

9. (அ) கற்புநெறி குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களை தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பண்டைத் தமிழ்ச் சமுதாயத்திடையே பரத்தையர் ஒழுக்கம் இருந்தது எனப் பொருந்துமா? ஆராய்க.

10. (அ) தொல்காப்பியர் தம் பொருளியற் கூறும் அகப்பொருட் புலனெறி வழக்குகள் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியல் தம் பொருளியற் கூறும் உள்ளுறை, இறைச்சி குறித்து ஆராய்க.

———————

**1511/LSO/PTAM11** **NOVEMBER 2016**

# உரையாசிரியர்களும் உரை மரபுகளும்

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

1. (அ) செய்யுள் வடிவ உரைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) நக்கீரர் வடமொழிப் பயிற்சி அவரது உரையால் எவ்வாறு புலப்படுகிறது?

2. (அ) இளம்பூரணர் உரையால், நீவிர் அறியும் அவரின் சிறப்பியல்புகளில் எவையேனும் இரண்டினைத் தக்க சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) சேனாவரையரின் சொற்பொருள் ஆய்வுத் திறன் குறித்து விளக்குக.

3. (அ) 'பேராசிரியர் தொல்காப்பியத்தில் பெரிதும் மதிப்புடையவர்' இக்கூற்றை ஆய்க.

(அல்லது)

(ஆ) 'பல்கலை அறிவுத் திறம் மிக்கவர் நச்சர்' என்பார் கூற்றை ஆய்க.

4. (அ) பரிமேலழகரின் உரைப்பாயிரத்தின் நுட்பம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அடியார்க்கு நல்லாரின் உரைநயத்தைப் புலப்படுத்துக.

5. (அ) பெரியவாச்சான்பிள்ளையின் உரை நயங்களுக்குச் சில சான்றுகள் தருக.

(அல்லது)

(ஆ) அடை மொழிகளை விளக்குவதில் பண்டிதமணியின் தனித்திறம் பற்றி விளக்கி வரைக.

பகுதி ஆ — ($5 \times 12 = 60$ மதிப்பெண்கள்)

கட்டுரை வடிவில் விடை தருக.

6. (அ) உரையாசிரியர்கள் கையாண்ட நடை வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) உரையாசிரியர் உவமை மரபுகளை விவரிக்க.

7. (அ) இளம்பூரணரின் நுண்மாண் நுழைபுலத்தைத் தக்க சான்றுகள் கொண்டு நிறுவுக.

(அல்லது)

(ஆ) சேனாவரையரின் உரைத்திறனும் உத்திகளும் குறித்து விவரிக்க.



8. (அ) பேராசிரியரின் உரைச் சிறப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பத்துப்பாட்டு உரை வாயிலாக புலனாகும் நச்சினார்க்கினியாரின் உரை நெறிகளை விவரிக்க.

9. (அ) ‘பன்னூற் புலமை மிக்கவர் பரிமேலழகர்’ என்பார் கூற்றை ஆராய்க.

(அல்லது)

(ஆ) ‘இலக்கண, இலக்கிய மேற்கோள்களைக் கையாளுவதில் வல்லவர் நல்லார்’ என்பார் கூற்றை நிறுவுக.

10. (அ) ‘பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானச் சக்கரவர்த்தி’ இக்கருத்தினை நிறுவுக.

(அல்லது)

(ஆ) பண்டிதமணியின் பாடற்பொருள் விளக்கத்தின் பான்மையை விவரிக்க.

———————

**1512/LV1/PTAM12** **NOVEMBER 2016**

ஒப்பிலக்கியம் II — இலக்கிய ஒப்பீடு

Time : Three hours Maximum : 100 marks

பகுதி அ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றுக்கு <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

1. (அ) இலத்தீன் மொழியின் தனித்தன்மைகள் யாவை?

(அல்லது)

(ஆ) தமிழ்-மலையாள மொழிகளுக்கிடையே உள்ள தொடர்புகள் குறித்து எழுதுக.

2. (அ) வடமொழியாளரது அலங்காரக் கொள்கையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) உள்ளுறை, இறைச்சி என்றால் என்ன? விளக்குக.

3. (அ) லாங்கினஸ், ஓரேசு பற்றி நீவிர் அறிவன யாவை?

(அல்லது)

(ஆ) இலத்தீன் 'திருச்சபைகளின் மொழி' என அழைக்கப்படுவது ஏன்? விளக்குக.

4. (அ) மலையாள மொழியில் இராமாயண, பாரத மொழிபெயர்ப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திருப்பாவை – திருவெம்பாவை — ஒப்பிடுக.

5. (அ) வீரயுகக் காலம் எது? ஏன்? விளக்குக.

(அல்லது)

(ஆ) கிரேக்க முல்லைப் பாடல்கள் குறித்து எழுதுக.

பகுதி ஆ — (5 × 12 = 60 மதிப்பெண்கள்)

அனைத்திற்கும் <u>கட்டுரை வடிவில்</u> விடை தருக.

6. (அ) வடமொழி இலக்கிய வரலாற்றினைச் சுருக்கி உரைக்க.

(அல்லது)

(ஆ) கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களை அறிமுகம் செய்க.

7. (அ) தமிழ்-வடமொழி இலக்கியக் கொள்கைகளை ஒப்பிடுக.

(அல்லது)

(ஆ) உரையாசிரியர்கள் திறனாய்வாளர்களே – நிறுவுக.



8. (அ) திறனாய்வு வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) அரிஸ்டாட்டில் கூறும் இலக்கியக் கொள்கைகளை விவரிக்க.

9. (அ) மலையாள மொழியில் பக்தி இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) 'சைவம் வளர்த்த தமிழ்' என்பது பற்றிக் கட்டுரை வரைக.

10. (அ) தமிழ்-கிரேக்க வீரயுகப் பாடல்களின் ஒற்றுமை, வேற்றுமைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) தமிழ்-கிரேக்க முல்லைப் பாடல்களின் பொதுத் தன்மைகளை எடுத்துரைக்க.

———————